DINAMANI

PAGE NO: 04

DATE: 02.02.2023

# புதுவை பல்கலை.யில் அரசுப் பள்ளி மாணவிகளுக்கு கருத்தரங்கம்

**புதுச்சேரி, பிப்.1:** அரசுப் பள்ளி மாணவிகளுக்கு உயர் கல்வி, வேலை வாய்ப்பு குறித்த கருத்தரங்கம் புதுவை பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக சமூகப் பணித் துறை, அவதார் மனிதவள நிறுவனமும் இணைந்து நடத்திய ஒரு நாள் கருத்தரங்கிற்கு, பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை வகித்தார். அவதார் மனிதவள அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் செளந்தர்யா ராஜேஷ் முன்னிலை வகித்தார். கருத்தரங்கில் புதுவை மாநிலத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவிகள் பங்கேற்றனர். அவர்களுக்கு உயர் கல்வி, வேலை வாய்ப்புகள் குறித்து விளக்கமாக எடுத்துரைக்கப் பட்டது. சமூகப் பணித் துறைத் தலைவர் கே. அன்பு வரவேற்றார். விழாவை பல்கலைக்கழக பேராசிரியர் ஏ. ஷாஹீன் சுல்தானா ஒருங்கிணைத்தார்.

DINAMALAR

PAGE NO: 03

DATE: 02.02.2023

# புதுச்சேரி மத்திய பல்கலையில் உத்தியோக் உட்சவ் கருத்தரங்கு



புதுச்சேரி பல்கலையில் நடந்த 'உத்தியோக் உட்சவ் 2023' ஒரு நாள் கருத்தரங்கில் பங்கேற்ற மனிதவள அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சவுந்தர்யா ராஜேஷிற்கு, துணைவேந்தர் குர்மித் சிங் நினைவுப் பரிசு வழங்கினார்.

**புதுச்சேரி, பிப். 2–** புதுச்சேரி பல்கலையில் உத்தியோக் உட்சவ் 2023 கருத்தரங்கு நடந்தது.

பல்கலைக் கழக சமுக பணித்துறை மற்றும் அவதார் மனிதவள நிறுவனத்தின் புராஜெக்ட் புத்ரி திட்டமும் இணைந்து உத்தியோக் உட்சவ் 2023 ஒரு நாள் கருத்தரங்கு நடந்தது.

புதுச்சேரி பல்கலை அரங்கில் நடந்த கருத்தரங்கிற்கு, சமூகப்பணித் துறை தலைவர் அன்பு வரவேற்றார். மனிதவள அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் சவுந்தர்யா ராஜேஷ் சிறப்புரையாற்றினார்.

கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய துணைவேந்தர் குர்மித் சிங் பேசுகையில், தாய் மொழியின் முக்கியத்துவம், தாய் மொழியில் கற்பதனால் ஏற்படும் அனுகூலங்களை விளங்கினார். கருத்தரங்கில், பேராசிரியர் ஷாஹீன் சுல்தானா, பேராசிரியர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.